(இ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உட்கோட்டத்தில் கட்டாய நெல் கொள்முதல்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்: அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர அனுமதி கோரி கடிதம் எழுதியுள்ளார். அந்தத் தீர்மானத்தின் வாசகம் பின்வருமாறு :—

"மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உட்கோட்டத்தில் கட்டாய நெல் கொள்முதல் செய்யும் பொதுவருவாய்த் துறை அதிகாரிகள் மக்களை மிரட்டி, மற்றும் பல துன்பங்களை இழைத்து சிறு விவசாயிகளிடம் அவர்கள் சொந்த உபயோகத்திற்கு வைத்திருக்கும் தானியங்களை பூராவும் எடுத்துச் செல்கிறார்கள். அதனால் மக்கள் பீதியுற்று, அதிகாரிகளின் அடக்குமுறைக்கும், பயமுறுத்தலுக்கும் பயந்து, தங்கள் ஊர்களை விட்டு ஓடும் நிலையில் உள்ளனர். ஆகவே மக்கள் அமைதியாக வாழும் நிலை அங்கு சீர்குலைந்துள்ளது" என்று ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கோரியுள்ளார்.

இந்தத் தீர்மானத்தில் கண்டுள்ள பிரச்சினை அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது என்பதல்லாமல் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு வேறு இருக்கும் போது அனுமதி கொடுக்க முடியாது. இதுபற்றிப் பேசுவதற்கு, இன்னும் கவர்னர் உரையின் மீதுள்ள விவாதம் மூன்று நாட்கள் இருக்கின்றன. மேலும், இன்டரீம் பட்ஜட், இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீதுள்ள விவாதமும் இருக்கிறது. இந்தக் காரணங்களினால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) கோவைப் பஞ்சாலைகளில் கதவடைப்பும், தொழிலாளரின் வேலையின்மையும்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்: அடுத்து, மற்றொரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எம். பூபதி அவர்கள் கொண்டுவருவதற்கு பேரவைத்தலைவரின் அனுமதியைக் கோரியுள்ளார்கள். அதன் வாசகம் பின் வருமாறு :

"கோவையில் பல மாதங்களாக மூடிக்கிடக்கும் (1) கம்போடியா, (2) ஜனார்த்தனா, (3) காளீஸ்வரா, (4) சோமசுந்திரா, (5) வாசுதேவா, (6) ஸ்ரீரங்கவிலாஸ் ஆகிய பஞ்சாலைகளைக் கதவடைப்புச் செய்துள்ளதால் 7,000 தொழிலாளர்கள் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினி கிடந்துவரும் விஷயத்தைப்பற்றி விவாதிக்கவும், 6,000-க்கு மேல் வேலை செய்யும் டெக்ஸ்டூல் தொழிற்சாலையில் மூன்று மாத காலமாக சம்பளம் கொடுக்காததால், தொழிலாளர் வேலை நிறுத்தம் நடந்து வருவதைப்பற்றி விவாதிக்கவும்" என்ற தீர்மானத்திற்கு அனுமதி கோரியுள்ளார்.

இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் என்று சொல்லக் கூடிய தொழில் விவகாரச் சட்டத்தால் தீர்க்கப்படக் கூடிய